Registered as a Newspaper

COMMERCE
வகுப்புக்கள்
88 Aug.
ஆரம்பம்:
1 - 02 - 86
சனி காலை 8 மணி
விபரங்கட்கு:
New Master
INSTITUTE
BMC Lane, Jaffna.

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை!

COMMERCE
வகுப்புக்கள்
88 August
பொருளியல் - திரு. குமாரவேல்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
வர்த்தகம் - திரு. ஜெயராமன
இந்து நாகரிகம் - திருமதி அருள் நங்கை
அளவையியல் - திரு. சந்திரராசா
தமிழ் - திரு. பாலா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ தை ௴ 18 ௳ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 20 (31-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-64

# மன்னாரில் 10 மணி நேரம் நடைபெற்ற கடும் போர்

## போராளிகள் நவீன ஆயுதங்களை பயன்படுத்தித் தாக்கினார்கள்

### 26 சிப்பாய்கள் இறந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை

மன்னார், ஜன. 31

அரசாங்க பாதுகாப்புப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மன்னாரில் கடந்த புதன்கிழமை பத்து மணி நேரம் தொடர்ச்சியாகக் கடும் போராட்டம் நடந்தது.

காலை தொடக்கம் மாலைவரை நடந்த இந்த மோதலில் முதலில் முற்றுகையிட்ட படையினர் இறுதியில் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக அறிய வருகிறது.

இந்த மோதலில் இராணுவ சிப்பாய்கள் பலர் இறந்ததாகக் கூறப்படுகிறது. இரண்டு ஹெலிக்கொப்டர்களும் சுட்டுச் சேதப்படுத்தப் பட்டனவாம்.

போராளிகள் இந்தத் தாக்குதலின்போது நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகவும் அறிய வருகிறது

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் மன்னார் நேரடி மோதலில் 26 சிப்பாய்கள் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போராளிகள் தரப்பில் ஒரு வீரர் மரணமானதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

மதியம் ஒரு மணியளவில் மேலும் 4 ஹெலிக்கொப்டர்கள் தொடர்ந்து பரப்புக்கடந்தான் பக்கமாகக் குண்டுகளை வீசின. பீரங்கி குண்டுகளும் வெடிக்கப்பட்டன. மோட்டோ ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டன. எனினும் போராளிகள் சளைக்கவில்லை. அவர்களது தாக்குத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை முகாமில் நேற்று நடைபெற்ற செய்முறை விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 31

கோட்டை முகாமில் இருந்து தீர்க்கப்படும் மோட்டோ ஷெல்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைப் பாதிக்காதாம்.

வட பகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா, ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியனுக்குச் செய்முறையாக அதை விளக்கிக் காட்டினார்.

இந்தச் செய்முறை விளக்கம் நேற்றுக் கோட்டை முகாமினுள் நடந்தது.

இணைப்பதிகாரியின் அழைப்பை ஏற்று டாக்டர் நச்சினார்க்கினியன் அங்கு சென்றார்.

கோட்டையில் இருந்து விடப்படும் ஷெல்கள் ஆஸ்பத்திரிக்கு மேலாகச் செல்லக் கூடியதாகத் தான் விடப்படும்.

ஆஸ்பத்திரியை அவை தாக்காது. ஆகவே டாக்டர்கள், ஊழியர்கள், நோயாளிகள் அச்சம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் நேற்றும் தொடர்ந்து சமர்

யாழ்ப்பாணம், ஜன. 31

முல்லைத்திவுப் பகுதியில் நேற்று நான்காவது நாளாக போராளிகளுக்கும், ஆயுதப்படையினருக்கும் இடையில் நேரடி மோதல் இடம்பெற்றது.

ஆயுதப்படை முகாமிலிருந்து பீரங்கி வேட்டுகளும் ஷெல் குண்டுகளும் அடிக்கடி தீர்க்கப்பட்டன. போராளிகளும் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

நகரம் நேற்று வெறிச்சோடியிருந்தது. வாகன நடமாட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. பாடசாலைகள் இயங்கவில்லை. அரச அலுவலகங்கள் ஸ்தம்பித்தன.

அங்கு மக்கள் பீதியால் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

அடிக்கடி ஹெலிக்கொப்டரிலிருந்து ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்ததாக அறியப்படுகிறது.

நேரடி மோதலின் போது உயிர்ச் சேதம் ஏற்பட்டது குறித்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

## கொழும்புக் கோட்டையில் 9 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜன. 31

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நின்ற சுமார் 9 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு சுமார் 7 மணியளவில் நடந்ததாக அறியப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

சுமார் 15, 16, தமிழ் இளைஞர்கள் ரயில்வே நிலையத்துக்கு அருகில் உள்ள பஸ்தரிப்பு ஒன்றில் பஸ்ஸுக்குக் காத்து நின்றனர். அங்கு திடீரென வந்த பொலீஸ் கோஷ்டி ஒன்று இளைஞர்களைத் தாக்கத் தொடங்கியது. அப்போது சுமார் 6 இளைஞர்கள் ஏதோ விதமாகத் தப்பி ஓடி விட்டனர். அங்கு நின்ற மீதி 9 பேரையும் பொலீஸார் கைதுசெய்து பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இவர்கள் தமது தேசிய அடையாளஅட்டையைக் காட்டிய போதும் பொலீஸார் அவர்களை விடவில்லை என்று அறிய வருகிறது.

## நுவரெலியாவில் தொடர்ந்து ஊரடங்கு சுமுக நிலைக்கு அரசு முயற்சி

கொழும்பு, ஜன. 31

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 9 பிரதேசங்களில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் இன்று காலை 7 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது.

எனினும் நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதற்கு இரு சமூகங்களுக்கிடையிலும் சமாதானத்தை ஏற்படுத்தவும் அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

நேற்று நுவரெலியாவில் நடந்த மாநாடு ஒன்றில் இது குறித்து ஆராயப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தேடுதல் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 31

வவுனியாவில் நேற்றும் மூன்றுவது நாளாக முகமூடி அணிந்த இளைஞர்களைக் கவச வாகனங்களில் ஏற்றி வந்த ஆயுதப்படையினர், சுமார் 50 க்கு மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர்.

ஆயுதப்படையினர் நேற்று ஹொறவப்பொத்தானை - மன்னார் வீதியிலும், வவுனியா நகரிலும் காலையிலிருந்து பலத்த தேடுதல் நடத்தினர்.

இதேவேளை வவுனியாவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 200 பேரும் நேற்றும் விடுதலை செய்யப்படவில்லை.

வவுனியா நகரம் நேற்று 8.30 மணிக்குப் பின் வெறிச்சோடிக் காணப்பட்டது.

## ஆசிரியர் நியமன கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 31

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் புதிதாக நியமனம் பெறும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கள், புதன் கிழமைகளில் வழங்கப்படும்.

இரு இடங்களிலும் உள்ள கல்விப் பணிமனைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் நியமனம் பெறும் 86 பேருக்கும் எதிர் வரும் மூன்றும் திகதியும்—

முல்லைத்தீவுப்பகுதியில் நியமனம் பெறும் 36 பேருக்கும் ஐந்தாம் திகதியும் அந்தந்தப் பகுதிக் கல்விப் பணிமனைகளில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப் படும்.

## கம்பன் தமிழ் கோட்டம் நல்லூரில் அமைக்க ஏற்பாடு

### 10 ஆம் திகதி அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 31

அகில இலங்கைக் கம்பன் கழகம் நல்லூரில் அமைக்க இருக்கும் கம்பன் தமிழ் கோட்டத்திற்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பெயரால் அமையவிருக்கும் இந்த இலக்கியப் பணிமன்றம் தமிழ் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும்.

கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்த்த அமரர்கள் கம்பரடிப் பொடி சா. கணேசன், பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன், வித்துவான் சி. ஆறுமுகம், தேவன், திருகோணமலை கம்பன் கழக பெருந்தலைவர் பெ. பொ. சிவசேகரனார் ஆகியோரின் நினைவை இக்கட்டடம் தாங்கிநிற்கும்.

இரண்டு மாடி கொண்ட இக்கட்டடத்தைக் கட்டிமுடிக்க ஐந்து லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

கட்டடத்தின் மேல் மாடியில் சிறிய கருத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

31.01.1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.36 முதல் 8.06 வரை

ராகுகாலம்:
11.06 முதல் 12.36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பாதுகாப்பு வலயத்தை வாபஸ் செய்:

## பத்து லட்சம் கையொப்பம்: சேகரிப்பு இயக்கம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 31

10 லட்சம் கையொப்பம் சேர்க்கும் இயக்கம் நாளை அங்குரார்ப்பணஞ் செய்யப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்த இயக்கம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

* பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்.
* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சன நெருக்கமாக வாழும் பகுதிகளில் இருந்து முதற் கட்டமாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.
* நீதியானதும் ஏற்பு உடையதுமான ஒரு அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை மீளவும் மெய்யார்வத்துடனும் தொடங்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வற்புறுத்தியே இந்த மாபெரும் கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது.

வடபகுதி பிரஜைகள் இணைப்புக்குழுவின் ஆதரவில் இந்த இயக்கம் செயற்படும்.

அங்குரார்ப்பணநிகழ்ச்

(4-ம் பக்கம் பார்க்க)

ஒரு வார கால மறியலின் பின்

## செயலக வேலைகள் மீண்டும் ஆரம்பம்

— அலுவலகச் செய்தியாளர்:- சண். ஜோண்சன் —

சுண்டுக்குளி, ஜன. 31

மறியல் போராட்டம் காரணமாக கடந்த ஒரு வாரகாலமாக இயங்க முடியாதிருந்த செயலகம் மீண்டும் நேற்று இயங்கத் தொடங்கியது.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை நீக்கக் கோரி நடத்தப்பட்ட மறியல் போராட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பேரணியுடன் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

யாழ் செயலகத்தில் நேற்று வழமை போல் அலுவல்கள் யாவும் நடைபெற்றன.

மறியல் போராட்டம் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த யாழ். கல்வித் திணைக்கள அலுவலகம், யாழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றிலும் நேற்று வழமை போல் அலுவல்கள் ஆரம்பமாகின.

## டிக்ஸிற் இங்கு வேண்டாமாம்

கொழும்பு, ஜன. 31

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றைத் திருப்பி அழையுங்கள்.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கோரும் தீர்மானம் ஒன்று கடந்த புதன்கிழமை மாலை கொழும்பு நகர மண்டபத்தில் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் விஷயத்தில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கருத்துக்களுக்குப் பதிலளித்து அறிக்கை விட்டிருந்தமைக்காக திரு. டிக்ஸிற் மீது கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### அரசின் பதில்

கொழும்பு, ஜன. 31

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகளுக்கான பதிலை இலங்கை அரசாங்கம், இந்திய அரசுக்கு அனுப்பிவைத்துவிட்டது.

ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

# படையினருக்கு வந்த எரிபொருள் அபகரிப்பு

## 'புளொட்' உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 31

கொழும்பிலிருந்து பாதுகாப்புப் படையினருக்காக ரயில் மூலம் தருவிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு பவுசர் எரிபொருள் நேற்று சுன்னாகம் ரயில் நிலையத்தில் வைத்து அபகரிக்கப்பட்டது.

காங்கேசன்துறை ரயில் நிலையத்திற்குக் கொண்டு போவதற்குத் தயாராக நின்ற பவுசரிலிருந்த எரிபொருளே அபகரிக்கப் பட்டது.

ரயில் நிலைய ஊழியர்களை ஆயுத முனையில் நிலைய அதிபர் அறையில் பூட்டி வைத்த பின்னர் சுமார் 25 ஆயிரம் கலன் எரிபொருளை அபகரித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்த எரிபொருள் பலாலி விமான நிலையப் பாவனைக்குக் கொண்டு வரப்பட்டது என்றும் - அதனைத் தாங்களே கைப்பற்றியதாகவும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உரிமை கோரியிருக்கிறது.

## முச்சந்திமுரளி



முந்தி அரசாங்கம் சிறப்புத் தூதராய் பார்த்தசாரதியை வேண்டாம் எண்டு சொல்லிச்சுது.

இப்ப இவை எதிர்க்கட்சிக்காரர் டிக்ஸிற் வேண்டாம்என்னுகினம்.

இந்திய அதிகாரிகள் எண்டால் இஞ்சத்தை யாருக்கு "அலர்ஜி" போலை!

சிமெந்துக் கூட்டுத்தாபன

## உயர் அதிகாரிக்கு இப்படி நடந்தது

சுண்டுக்குளி, ஜன. 31

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தில்வைத்துஇராணுவத்தினரால்அழைத்துசெல்லப்பட்ட கூட்டுத்தாபன உயரதிகாரி விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டார்.

காலையில் சிமெந்து தொழிற்சாலைக்குள் புகுந்துஅவரை தம்முடன் கொண்டுசென்ற சிப்பாய்கள் பின்னர் அவரை நண்பகல் 12மணியளவில் விடுவித்தனர்.

மீண்டும் 3மணியளவில் கூட்டுத்தாபனத்திற்கு வந்த இராணுவத்தினர் அந்த உயரதிகாரியைத் திரும்பவும் அழைத்துச் சென்றனர்.

அவர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரைத் தவிர பாதுகாப்பு பிரிவுக்குப்பொறுப்பான உயர்அதிகாரி ஒருவரும் மற்றும்மூவரும் விசாரிக்கப் பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(முந்திவந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

பனம் பொருள் அபிவிருத்திச் சபை

## தலைமை அலுவலகம் ஆராய்ச்சி நிலையம் இன்று அடிக்கல்

நல்லூர், ஜன. 31

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம், பனைவள ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று நடைபெறுகிறது.

கைதடியில் உள்ள சபைக்குச் சொந்தமான காணியில் இவை 25 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா சம்பிரதாய பூர்வமாக அத்திவாரக்கல்லை நட்டு வைப்பார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான ரீதியிலான பனைவளஆராய்ச்சி வேலைகளைத் துரிதப்படுத்தும் வகையில் இப்பனைவள ஆராய்ச்சிநிலையம் செயற்படும்.

1983 ஆம் ஆண்டு பெப்ருவரியில்ஐ.நா.உலக

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசிகர்களின் ரசனையில் மாற்றம் காண்கிறேன்

சின்ன வீடு படத்தில் பாக்கியராஜின் தாயாராக நடித்தவர் கோவை சரளா. காமெடி படங்களில் நடித்து வந்த சரளா சின்ன வீடு படத்தில் குணசித்திர பாத்திரம் ஏற்று சிறப்பாக நடித்தார்.

அவர் சொல்கிறார்:

நான் இதுவரை பல படங்களில் நடித்துள்ளேன். அதில் பல படங்களில் காமெடி

### சொல்பவர் சரளா

படங்களில்தான் நடித்திருக்கிறேன்.

பத்துப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் சின்ன வீடு படத்தில் குணசித்திர வேடத்தில் வித்தியாசமாக நடித்துள்ளேன்.

இதுவரை நடித்த காமெடிப் படங்களில் அழுத்தம் இல்லாத பாத்திரங்களில் தான் நடித்திருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

இப்படிப்பட்ட படங்களில் நடித்து வந்த எனக்கு, வித்தியாசமான ஒரு பாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

அந்த ஆசை சின்ன வீடு படத்தின் மூலம் நிறைவேறிவிட்டது.

மனோரமா அக்காவைப் போல, இருக்கிற திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை.

நான் எத்தனை படங்களிலே நடிக்கிறேன் என்பதை கணக்கிடுவதில்லை. வந்ததை எல்லாம் வட்டியும் முதலுமாக சேர்த்துக் கொள்ளும் பழக்கமும் என்னிடம் கிடையாது.

நட்சத்திரங்களின் பிரகாசிப்பு அதிக பட்சம் பத்து வருடங்கள் தான் என்பது எனது கணிப்பு.

எனவே இந்த ஓட்டப் பந்தயத்திலே என்னால் முடிந்த அளவுக்கு வெற்றி பெற முயற்சி செய்கிறேன். வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

ரசிகர்களின் ரசனையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது. அதற்கு ஏற்றபடி நானும் எனது நடிப்பில் மாற்றத்தைச் செய்து கொண்டுள்ளேன் என்றார் சரளா.

# பாகிஸ்தானில் பிரமாண்ட பேரணி

வெளி உலகில்

## 17 ஆயிரம் ஆதரவாளர் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

லக்னோ, ஜன. 30

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் பிரமாண்டமான அரசு எதிர்ப்பு பேரணியொன்று நடைபெற்றது.

17 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட தொகையினர் இந்தப் பேரணியில் ஆதரவாளர்களாகக் கலந்து கொண்டதாகத் தெரிய வருகிறது.

பாகிஸ்தான் ஜனநாயக மீட்பு இயக்கம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்து இருந்தது.

ஜனநாயக முறைகள் சுதந்திரமாக பாகிஸ்தானில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தே இது ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் இதுவரை கண்டிராத அளவுக்கு இந்த ஆர்ப்பாட்டப் பேரணி காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன

11 கட்சி ஜனநாயக அணியின் தலைவர்கள் பேரணியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் சிவிலியன் அரசை வெறும் கண்துடைப்பு என்று அவர்கள் அங்கு கண்டித்துப் பேசினர்.

பாகிஸ்தானில் அண்மையில் தான் ஏழரை ஆண்டுகால இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது.

எனினும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாஉல்-ஹக் இராணுவத் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் இருந்து வருகிறார்.

### விபத்து

மெக்ஸிக்கோ, ஜன. 30

மெக்ஸிக்கோவின் விமான நிலையமொன்றில் நிகழ்ந்த விமான விபத்தில் விமான சிப்பந்திகள் 3பேர் உட்பட 25பேர் இறந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமையன்று இந்த பயங்கர விபத்து நேர்ந்தது.

விபத்தில் உயிரிழந்த அனைவரும் மெக்ஸிக்கோ பிரஜைகள் என தெரிவிக்கப்படுகிறது.

## பினாங் கடற்கரையில் வெளிநாட்டு பெண்கள் வெயில் குளிப்பு

### திறந்தமார்போடு இருப்பதாக உள்ளூர் வாசிகள் முறைப்பாடு

கோலாலம்பூர், ஜன. 30

பினாங்தீவின் கடற்கரையில் வெயில் குளிக்கும் (சன்பாத்) வெளிநாட்டவர்களுக்கெதிராக மலேசியாவின் வடபகுதி வாசிகள் முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

பது பெறிங்கி என்ற இந்த உல்லாச உலாவுக்கான கடற்கரையில் வெளிநாட்டு பெண் உல்லாசப் பிரயாணிகள் தமது மார்பகத்தை மறைக்காமல் வெயில் குளிப்பதாக தமது முறைப்பாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கடற்கரைக்கு தாம் செல்ல முடியாதிருப்பதாகவும் இதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளை அவர்கள் மேலும் கோரியுள்ளனர்.

## கருத்தடை விடயம்: பாப்பரசரின் இந்திய பேச்சுக்களில் இடம்பெறமாட்டாது

### புதுடில்லி பேராயர் அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 30

பரிசுத்த பாப்பரசர் ஜோன் போல் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும்போது பிரச்சினைக்குரிய கருத்தடைத் திட்டம் பற்றி எதுவும் பேச மாட்டார்.

இந்தத் தகவலை புதுடில்லியில் இருக்கும் பேராயர் ஏஞ்சலோ பெர்ணாண்டஸ் வெளியிட்டுள்ளார்.

பெப்ரவரி 1ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை பாப்பரசரின் சுற்றுலா திட்டமிடப்பட்டுள்ளது.

மதரீதியான வைபவங்களிலும் மற்றும் கிறிஸ்தவ திருச்சபையின் ஐக்கியம் தொடர்பான விடயங்களிலுமே அவர் கருத்துச் செலுத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கையான கருத்தடை முறைகளை பாப்பரசர் தொடர்ந்து கண்டித்து வருகிறார்.

சனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியாவும் செயற்கையான கருத்தடைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பாரத அரசுக் கொள்கையும் பாப்பரசரின் கொள்கையும் கருத்தடை கட்டுப்பாட்டுத் திட்டங்களில் அடிப்படையில் வேறுபாடு கொண்டவையாகும்.

இந்த முரண்பாடு காரணமாகவே பாப்பரசர் தமது பேச்சுக்களில் கருத்தடை விடயங்கள் பற்றிப் பேசமாட்டார் என்று தெரிகிறது.

## இஸ்ரவேல் ஜோர்தான் உச்சி மாநாடு

ஹேக், ஜன. 30

இஸ்ரவேல் - ஜோர்தான் உச்சிமாநாடு வெகு விரைவில் நடைபெற இருப்பதாகத் தெரிகிறது.

இஸ்ரவேல் பிரதமர் சிமொன் பெரெஸுடன் அமெரிக்கா ராஜாங்க அமைச்சு உதவிச் செயலாளர் ரிச்சர்ட்மர்பி இது சம்பந்தமான பேச்சுக்களை நடத்தினர்.

# பிலிப்பீன்ஸ் இராணுவம் அபாய அறிவிப்பு

## தடைமுகாம்கள் போடுமாறு தளபதிகளுக்கு ஜெனரல் உத்தரவு

மணிலா, ஜன. 30

பிலிப்பீன்ஸ் இராணுவம் அபாய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

புதிய மக்கள் இராணுவம் என்ற இயக்கத்தைச் சேர்ந்த 200 தொடக்கம் 300 வரையான கம்யூனிஸ்ட் கெரில்லாப் போராளிகள் நகருக்குள் நடமாடுகிறார்கள் என்பதே இந்த அபாய அறிவிப்பு.

மேஜர் ஜெனரல் புரொஸ்பரோ ஒலிவாஸ் சென்ற திங்கள் இரவு படைத் தளபதிகளின் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டியதாக பிலிப்பீன்ஸ் செய்தி ஏஜன்சி தகவல் வெளியிட்டது.

கெரில்லாக்களைக் கண்டு பிடிக்க சோதனைத் தடைமுகாம்களை ஆங்காங்கு ஏற்படுத்துமாறு ஒலிவாஸ் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெப்ரவரி 7ஆம் திகதி பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்கான தீவிர பிரசாரங்கள் நடைபெறுகின்றன. அசம்பாவிதங்களும் நிகழ்ந்துள்ளன.

ஜனாதிபதி மார்க்கோஸ் தேர்தலில் தனக்கு தோல்வி ஏற்படும் என சந்தேகம் கொண்டால் தேர்தலையே ரத்துச் செய்துவிடலாம் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கூறிவருகின்றன.

1972 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை பிறப்பிக்கப்பட்டிருந்த இராணுவச் சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்படலாம் எனவும் எதிர்க்கட்சிகள் மேலும் தொடர்ந்து கூறி வந்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுவதும் பரா இராணுவப் படைகள் சேவைக்கு அழைக்கப்படுவதும் இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிஷப் டுட்டு ஆதரவு

ஜொஹனஸ்பேர்க், ஜன. 30

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தை இதன் நல்ல பல கொள்கைகளுக்காக தான் ஆதரிப்பதாக பிஷப் டுட்டு தெரிவித்துள்ளார்.

3 வார கால தனது அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு சென்ற செவ்வாயன்று தாயகம் திரும்பியுள்ளார் டுட்டு.

ஜோஹானஸ்பேர்க்கில் உள்ள றாஸ்செற்றன் வில்லியில் பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்ஸை தான் ஆதரிப்பதாக அறிவித்தார்.

## வவுனியாவில் 150 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன 31

வவுனியாவில் புதன் அன்றுநடந்த தேடுதலின் போது, இராணுவத்தினர் சுமார் 150 பேரைக் கைது செய்து முகாமுக்கு அழைத்துச் சென்றனர்;

ஹொரவப்பொத்தானை வீதி, மன்னார் வீதி, இறம்பைக்குளம் ஆகிய பகுதிகளில் இது நடந்தது.

கைதானவர்களில் பாடசாலை மாணவர்களும் அடங்குவர்.

## சித்த மருத்துவம்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். பல்கலைக் கழக சித்த வைத்தியத்துறை ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ளதை யொட்டி ''சித்தமருத்துவம்'' என்னும் மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது.

சித்த மருத்துவத்துறை மாணவ மன்றத்தினால் இம்மலர் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

# சிமெந்து தொழிற்சாலையில் இராணுவம் உயர் அதிகாரி தடுத்துவைப்பு

## காங்கேசனில் பதற்றம்

காங்கேசன்துறை, ஜன 31

நேற்றுக்காலை காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினுள் திடீரெனப் புகுந்த இராணுவம் அங்கு கடமையிலிருந்த உயர் அதிகாரி ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றது.

இராணுவம் திடீரென கூட்டுத்தாபனத்தினுள் புகுந்ததால் அங்கு கடமையிலிருந்த ஊழியர்கள் பயத்தினால் வேலையை விட்டு ஓடினார்கள்,

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன வடக்கு வாசலால் உள் நுழைந்த சிப்பாய்கள் அங்கிருந்த பாதுகாப்புப் பிரிவு அதிகாரியை கட்டிப் போட்டுவிட்டு கூட்டுத்தாபன அலுவலகத்தில் நுழைந்தனர்.

அங்கு வேலைத்தளத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி ஒருவரை விசாரணைக்காக கூட்டிச் சென்றனர்.

இச்சம்பவத்தால் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் பெண்கள் உட்பட பெரும்பான்மையோர் பயம் காரணமாக வேலைகளை விட்டு ஓடினார்கள். அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

இதற்கிடையில் கடந்த புதன் இரவு கூட்டுத்தாபனத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெற்று பவுசர் ஒன்றை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டிகொள்ளையிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புதிய அதிபர் பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ. பதவி ஏற்றார்.

வித்துவான் சொக்கலிங்கம் புதிய அதிபராக நியமனம் செய்யப்பட்டதை மகா வித்தியாலய நலன் விரும்பிகள் வரவேற்று அறிக்கை விட்டுள்ளனர்.

# முஸ்லிம்கள் பிரச்சினை; ஆராய தனியான மாநாடு

மட்டக்களப்பு, ஜன 31

இனரீதியிலான போராட்டத்தால்கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, அவை குறித்து எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை பற்றி ஆராய்வதற்காக கிழக்கு மாகாண முஸ்லிம் மாநாடு ஒன்று விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காத்தான்குடியில் இந்த மாநாட்டை நடத்துவதற்கானஏற்பாடுகளை பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள், சம்மேளனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூக, சமய பிரமுகர்கள் கலந்து கொள்ள விருக்கும் இம்மாநாட்டில் முஸ்லிம்கள் நின்மதியுடனும் மற்றைய இனங்களுடன் ஒற்றுமையுடனும் வாழ்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இப்பகுதி மக்களையே நியமியுங்கள் - பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம். ஜன 31

யாழ் மாவட்ட அரச அலுவலகங்களில் உருவாகும் வெற்றிடங்களுக்கு யாழ் பிரதேச மக்களை நியமிக்கவும்.

வேறு மாவட்டங்களில் உள்ளவர்களை யாழ் மாவட்ட அரச அலுவலக வெற்றிடங்களுக்கு மாற்றம் செய்வதை உடனே நிறுத்தவும்

பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எழுதுவினைஞர் சேவையிலும் ஏனைய அரச துறைகளிலும் பெரும்பாலான வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆனால் இவ்வெற்றிடங்களை நிரப்பும்போது வேறு மாவட்டங்களில் தெரிவு செய்தவர்களை திட்ட அமுலாக்கல் அமைச்சு நியமிக்கிறது

இது யாழ்பிரதேச மக்களுக்கு எதிரான அப்பட்டமான பாரபட்சம் ஆகும்.

-இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அனுப்பியுள்ள மகஜரில் வலியுறுத்தி உள்ளார்.

## அடக்குமுறைச் சட்டம்; ஆயுதப் போருக்கு காரணம்

### ஊர்காவற்றுறை இணைப்புக்குழு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 31

அடக்கு முறைச் சட்டங்கள் சாத்வீக வழியில் நம்பிக்கை கொண்டுள்ள தமிழ் பேசும் மக்களையும் ஆயுதம் ஏந்திய போராட்டத்துக்கே இட்டுச் செல்லும்.

ஊர்காவற்றுறை மக்கள் ஸ்தாபனங்களின் இணைப்புக் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளது.

பாதுகாப்பு வலயத்தைக் கண்டித்தே இம்மகஜர், யாழ். அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,

ஓர் முடிவற்ற யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பயனற்ற, அர்த்தமற்ற முயற்சியைக் கைவிடுங்கள்.

ஆயுதப் போராட்டத்தின் அடிப்படைக் காரணமே இனப்பிரச்சினை தான் இனப்பிரச்சினையில் இருந்து ஆயுதப் போராட்டத்தை பிரித்து நோக்குவது எமக்குப் புரியாத புதிராக உள்ளது.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## சிங்கள முதலாளி மகன் கைதாகி விடுதலை

கொழும்பு, ஜன 31

அம்பாறையைச் சேர்ந்த சிங்கள முதலாளி விமலரத்தினவையும் அவரது மகனையும் பொலிஸ் அதிரடிப் படையினர் விசாரணைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

விசாரணையின் பின்னர் புதனன்று அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

எதற்காக விசாரணை செய்யப்பட்டனர் என்பது தெரியவில்லை.

## ஏழைக் குடும்பங்கள் வீடு கட்ட பணஉதவி

### தலா ஐயாயிரம் வழங்கப்படும்

நல்லூர், ஜன. 31

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் இருக்கும் வறிய, தர்மப் பணம் பெறும் ஏழைகளுக்கு வீடு கட்டுவதற்கு பணம் வழங்கப் படவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் [illegible] சேவையாளர் பிரிவுகள் [illegible] கள் உள்ள இரண்டு குடும்பங்களுக்கு, ஒன்றிற்கு ஐயாயிரம் ரூபா வீதம் பத்தாயிரம் ரூபா வழங்கப்பட இருக்கிறது.

பத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இப் பணம் பிரித்து வழங்கப் படும்.

உதவி அரசாங்க அதிபர் [illegible] சேவை உத்தியோகத்தர் களினூடாக இது வழங்கப் படும்

### மினி சினிமா

**நவா மினி**

(உஷா மினி முன்பாக)

Richard Harris

இராணுவத் தளபதியாக

Richard Roundree

கெரில்லாத் தலைவராக

**GAME for VULTURES**

முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.


# கல்யாண வைபோகம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன ஆண்டு தைத்திங்கள் 21ஆம் நாள் (3-2-1986) திங்கட்கிழமை மாலை 6-56 மணி முதல் 8-01 மணி வரை உள்ள சிங்க இலக்கின சுப முகூர்த்தத்தில்

| மார்க்கண்டு தம்பதிகளின் ஏகபுத்திரன் திருநிறை செல்வன் **புவனேஸ்வரன்** (நெல் சந்தைப்படுத்தும் சபை) | நவரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **நவசக்தி** (ஆசிரியை, இந்துக் கல்லூரி) |
|---|---|

இறைவன் திருவருளால் இவர்கள் திருமணத்தை நடத்திவைக்கப் பெற்றோர்கள் நிச்சயித்திருக்கின்றனர்.

திருகோணமலை, பிரதான வீதி, 68ஆம் இலக்கத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்கள், தங்கள் சுற்றம்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சிவபாலசுந்தரம் (மணமகனின் மைத்துனர்) பிரிமா மாஆலை
திருமதி சிவமலர் சிவபாலசுந்தரம் (மணமகனின் சகோதரி) ஆசிரியை, திருகோணமலை மேற்கு தமிழ் மகா வித்தியாலயம். ஐயனார்கேணி, திருகோணமலை.

திரு. சு. நவரத்தினம்
திருமதி பராசக்தி நவரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்கள்) 68, பிரதான வீதி, திருகோணமலை.
ந. சக்திதாசன் தம்பதிகள் உரிமையாளர்: கங்கா ஸ்டோர்ஸ்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

அனாதைகளின் பொருள்களை அவர்களிடமே கொடுத்து விடுங்கள். அவர்கள் பொருள்களை உங்கள் பொருள்களுடன் சேர்க்காதீர்கள். அனாதைகளை அடிக்காதீர்கள். அவர்களை அடித்த அழுதால் இறைவனின் சந்நிதானமே நடுங்குகின்றது.

- பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள்.

உதயன்
உண்மை - அநுசாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24805 22073
31-01-86 த. பெ. 23

## அமெரிக்கா ஒரு பூனை: அதுவும் பால் குடிக்குமா?

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விஷயத்தில் அமெரிக்காவின் திட்டவட்டமான நிலை இதுவரை வெளிப்படையாகத் தெரியாது. எனினும் சமாதான முறையில் நியாயமான ஒரு சமரசத் தீர்வைக் காண வேண்டும் என்று மேலெழுந்தவாரியாக அது கூறி வருகிறது. இந்த விஷயத்தில் தனக்குத் தீவிர அக்கறை எதுவும் இருப்பதாக காட்டிக் கொள்வதும் இல்லை

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்று, சுதந்திர மக்களாக வாழவேண்டும் என்ற நிலையை அமெரிக்கா ஆதரிக்கவில்லை என்ற கருத்து தமிழ் மக்களிடையே வேரூன்றி உள்ளது.

நேரிடையாகச் சொல்வதானால் தமிழ் மக்களுக்குப் பாதகமான காரியங்களைச் செய்யும் ஒரு நாடாகவே அவர்கள் அமெரிக்காவைக் கருதுகிறார்கள்.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற நிலையில் அமெரிக்கா இருப்பதை தமிழ் மக்கள் உணரத் தவறவில்லை.

திருகோணமலையில் அமெரிக்கா கண் வைத்திருக்கிறது. அதனை அடைவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு எல்லாவிதமான உதவிகளையும் அது செய்யும். இப்படித் தமிழ் மக்கள் நினைக்கிறார்கள்.

வெளியிலே தெரியாவிட்டாலும் இரகசியமாக அமெரிக்கா உதவிகள் செய்து கொண்டே இருக்கும் என்றும் தமிழ் மக்கள் சந்தேகிக்கிறார்கள்.

இந்த ஐயப்பாட்டை நீக்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் முயன்றதில்லை.

இலங்கை இனப் பிரச்சினையில் தனக்குப் பெரிதாக அக்கறை எதுவும் இல்லை என்று அமெரிக்கா காட்டிக் கொண்டாலும், அங்கிருந்து வெளிவரும் பிரபல சஞ்சிகை ஒன்று உண்மையை வெளிக்கொண்டு வந்துவிட்டது.

"கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிற்றர்" என்ற அந்த ஆங்கில சஞ்சிகை அமெரிக்காவில் பிரபல்யமானது. அது உலகின் பல நாடுகளிலும் விரும்பி வாசிக்கப்படுவது.

அந்தச் சஞ்சிகை எழுதிய ஆசிரியத் தலையங்கம் ஒன்றில், இலங்கை இனப் பிரச்சினையில் அமெரிக்கா அளவுக்கு அதிகமான அக்கறை காட்டக்கூடாது எனத் தனது நாட்டு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருக்கிறது.

அந்த ஆலோசனை எதனைப் பிரதிபலிக்கிறது? அமெரிக்கா எங்கள் நாட்டுப் பிரச்சினையில் மிகத் தீவிரமான அக்கறை காட்டி வருகிறது. அது விஷயத்தில் உள்ளந்தரங்க உதவிகளைச்செய்து வருகிறது இவற்றையே அந்த ஆலோசனை பூடகமாக எடுத்தியம்புகிறது.

இனப்பிரச்சினையை இந்தியா கைகழுவி விடும்வரை அமெரிக்கா தீவிர அக்கறை காட்டக்கூடாது என்ற நிபந்தனையும் வேறு, அதுவும் இந்தியாவுடன் வளர்ந்துவரும் புதிய நட்பைக் கெடுத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த நிபந்தனை.

இதற்கு மற்றப் பக்கமாக அர்த்தம் கூறுவதானால், இலங்கை இனப்பிரச்சினையை தனக்குச் சாதகமாகத் தக்க தருணத்தில், பயன்படுத்தக் காத்திருக்க வேண்டும் என்று "கி. ச. மானிட்டர்" தனது நாட்டுக்கு புத்தி சொல்லுகிறது.

கூட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து—

இலங்கை இனப்பிரச்சினையில், அது இழுபறிப்படுவதில் – அமெரிக்காவுக்கு அதிக பங்கு உண்டு.

அது வெளிப்படையாக அதிகம் அலட்டிக் கொள்ளாவிட்டாலும், தமிழர்களுக்கு எதிராக இயங்குவதற்கு அரசாங்கத்துக்கு உள்ளந்தரங்கமாக உதவி வருகிறது.

நிலைமை மிக மிக மோசமடையும் ஒரு கட்டத்தை அடையும்வரை காத்திருக்கவேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இதனை உலகின் ஏனைய நாடுகள் கவனத்தில் கொள்ளாமலா இருக்கப் போகின்றன?

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் வந்துள்ள 854 அகதிகள் குடும்பங்களுக்கு உடை, பால்மா, தேயிலை உள்ளடக்கிய பொதிகளை யாழ் தென்னிந்திய திருச்சபை வழங்கியுள்ளது.

சங்கானையில் உள்ள 84 குடும்பங்கள், தெல்லிப்பளையில் 42 குடும்பங்கள், உடுவிலில் 39 குடும்பங்கள் நவாலியில் 14 குடும்பங்கள், வல்வெட்டித்துறையில் 223 குடும்பங்கள், பருத்தித்துறையில் 192 குடும்பங்கள், நல்லூர், சங்கிலியன் அகதி முகாமில் 69 குடும்பங்கள், நல்லூர் மகளிர் பேரவையில் 73 குடும்பங்கள், செட்டிகுளத்தில் 93 குடும்பங்கள், முரசுமோட்டையில் 25 குடும்பங்கள்என்ற அடிப்படையில் இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அகதிகள் குடும்பத்துக்கும் 350 ரூபா பெறுமதியான அன்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

# வட பகுதிக்குரிய பெருந்தோட்ட பயிர் பனையே!

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்படவிருக்கும் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் தேசிய பனைவள ஆராய்ச்சி நிலையம், தலைமைக்காரியாலயம் ஆகியவற்றிற்கான அடிக்கல்இன்று (31 01 1986) கைதடியில் நட்டு வைக்கப்படுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

## உலர் வலயத்தில் அதன் விருத்தி அவசியம்

கலாநிதி சோ. கந்தையா
— தாவரவியல் பகுதி யாழ் பல்கலைக்கழகம்

மக்கள் தங்களது உணவு, தம்பு, எரிபொருள் ஆகிய தேவைப்பாடுகளுக்காக ஒளித்தொகுப்பில் இன்னும் பல வருடங்களுக்கு தங்கியிருக்க வேண்டும். தாவரங்களின் பச்சை இலைகளில் நடைபெறும் இந்த இயற்கை செய்முறையை விஞ்ஞானிகளின் இடைவிடா முயற்சியிருந்தும்கூட தொழிற்சாலைகளில் செய்ய முடியாது இருக்கிறது. இச்செய் முறையை நிலை நிறுத்துவதற்கு சூரிய ஒளிச் சக்தி, பச்சையம் காபனீரொட்சைட்டு, நீர் ஆகியன அத்தியாவசிய காரணிகளாகும்.

இவற்றுள் விசேடமாக வரண்ட வலயங்களில் எல்லைப்படுத்தும் காரணி நீராகும் அத்துடன் இவ் வரண்ட வாழிடங்களில் விவசாய எதிர் காலப் பயனை நிர்ணயிப்பது பெருமளவில் இதுவே யாகும்.

வரண்ட வலயத்தில் வாழும் நாங்கள் ஆகக் குறைந்த நீருடன் ஆகக் கூடியளவு பச்சை இலைகளை (பச்சையம்) பெற முடியுமாயின் நாங்கள் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாகக் கொள்ளலாம்.

இலங்கையின் வட பகுதியில் விவசாய அபிவிருத்தி, மட்டுப் படுத்தப்பட்ட நன்னீர் விநியோகத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

தொடர்ச்சியான சக்தி இழப்புடன், வடபகுதியில் பாரம்பரிய பயிர்ச் செய்கையும் வருங்காலத்தில் குறைந்தளவு வருமானத்தையே தரும்.

இதன் அடிப்படையிலேயே இலங்கையில்மாத்திரமல்ல ஏனைய வரண்ட நாடுகளிலும் பனைமரத்தின் பயன்களை மீண்டும் கண்டறிவதற்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

1978 – ஆம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபை ஸ்தாபிக்கப்பட்டதும், 1983 இல் உணவு விவசாய நிறுவனத்தினால் பனம் தொழிற்பாடு மாநாடு நடத்தப்பட்டதும் இன்று ஆரம்பிக்கப்படும் பனை ஆராய்ச்சி நிலையமும் இந்த எழுச்சியை ஊக்குவிக்கின்றது.

பனை "பாமே" என்னும் புராதன குடும்பத்தைச் சேர்ந்ததுடன் இது மிக பழைய பூக்கும் தாவரங்களின் கூட்டத்தில் அடங்கும். இதன் சுவடுகள் 12கோடி வருடங்களுக்கு முந்தியதாகும்.

தற்போதுள்ள பனையின் வடிவமும் அமைப்பும் பல கோடி வருடங்களில் ஏற்பட்ட இயற்கைத்தேர்வினால் வந்தது என்பதை இந்தப் புராதன பரம்பரை விளக்குகின்றது.

ஆகவே தற்போது இம்மரங்கள் உள்ள இடங்கள் மிகச் சிறந்த சூழ்நிலைக்கேற்ப மாற்றம் அடைந்துள்ளதென்பதை ஒருவர் எதிர்பார்க்கலாம் மக்களின் நேரடித் தலையீடு இல்லாத பனைமரங்களுக்கு இவ்வாறு நடந்துள்ளதெனலாம். இவ்வாறான இயற்கைத் தேர்வு செய்முறையினால் வளர்ச்சிக்கும் தப்பி வாழ்வதற்கும் மிகக் குறைந்தளவு பராமரிப்புத் தேவை உள்ள ஓர் தாவர வர்க்கத்தைக் கொடுக்கின்றது.

விவசாய விளைவுகளுக்கான சக்திச் செலவைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கும் இவ்வுலகத்திற்கு, பனம் உற்பத்திப் பொருள்களுக்கான சக்திச்செலவு மிகவும் கவர்ச்சிகரமானது என்பதில்ஐயமில்லை.

அத்துடன் கடந்த காலங்களில் வரண்ட பிரதேசங்களில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திய அதிசயத் தாவர வர்க்கங்களுடன் ஒப்பிடும்போது கூட பனை மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகிறது

மக்களின் பயன்பாட்டைப் பொறுத்தளவில் பாம் குடும்பம் கிறமினேக்கு (தானியங்களும், புற்களும்)அடுத்ததாகும். இந்த வரண்ட பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளாகிய உணவு, தும்பு, எரிபொருள் ஆகியவற்றின் கொள்ளளவு இம் மக்களுக்கு தெரிந்ததே.

இலங்கையில் தென்னை மரங்களுக்கு முன்பே பனைமரங்கள் பரந்தளவில் வளர்க்கப்பட்டன; ஆனால் யுத்தத்தின் பின் துரதிர்ஷ்டவசமாக தாவர ஆராய்ச்சியில்மிகவும் குறைந்தளவே இது கவனிக்கப்பட்டது.

அபிவிருத்தியடைந்த –மேற்கத்திய குளிர் வலயங்களின் தாவர ஆராய்ச்சி நிலையங்களுக்கு அப்பால் இவை வளர்ந்தது காரணமாக இருக்கலாம்

மேலும் இதன்உயர்ந்த தோற்றம், நீண்ட பரம்பரை இடைவெளி, நிதிப் பற்றுக்குறை,அபிவிருத்தியடையும் நாடுகளிலுள்ள பயிற்றப்பட்ட விஞ்ஞானிகளின் பற்றுக்குறை ஆகியன பனையின் எதிர் காலப் பயனை உணர்வதில் இற்றைவரை தடையாகவிருந்தது.

பனை மரத்தின் எதிர் காலப் பயன் என்ன?

ஒரு பனந் தோப்பில் ஒரு ஹெக்ரர் 600 பனைகளை இலகுவாகக் கொண்டிருக்கும் இந்த அடர்த்தியுள்ள பனைகளின் வளர்ச்சி அதன் இலைகளின் ஒளித் தொகுப்பினால் உற்பத்தியாக்கப்பட்ட உலர் பொருளினால் கொடுக்கப்படலாம். 600

டனைகளும் பயன்படுத்தப்படுகின்றதெனக் கொண்டு தற்கால விளைச்சல் அடிப்படையில், இலைப்பரப்பின் வருடாந்த ஒளித்தொகுப்பு விளைவு:-

(தும்பும், கால் நடைத் தீனியும்) – 6500 கிலோ கிராம் – ஹெக்ரர்,
சாறு (பனங்கட்டி) –) 30,000 கி.கி – ஹெக்ரர்,
பழக்களி – 1500 கி. கி –ஹெக்ரர்
கிழங்கு (மாப்பொருள்) 1000 கி.கி – ஹெக்ரர்

பழக்களியும் கிழங்கும் சாறு எடுக்கப்படாத பெண்பனைகளின் உற்பத்திகளாகும். சிவுதல் ஒளித்தொகுப்பை தூண்டுகின்றது.

மேலே கொடுக்கப்பட்ட விளைச்சல்கள் மிகவும் உற்சாகமூட்டக்கூடியதாகவிருக்கிறது ஈர வலயத்திலுள்ள டாரம் பாரிய பெருந்தோட்டப் பயிர்களிலும் பார்க்க இது குறைவானதுமல்ல. ஆகையினால் இலங்கையில் உலர்வலயத்தில் பயிரிடும் பயிர்களுக்கு தற்போது பொருத்தமற்ற இடங்களைப் பயன்படுத்துவதற்காக ஓர் பயிரைக் கண்டுபிடிப்பதற்கு உந்தப்பட்டுள்ளோம்.

மக்கள் கடந்த காலங்களில் சரியான பயிர்த் தேர்வுகளை மேற்கொள்ளாததால் பெருமளவு ஒளித் தொகுப்பு அதிகரிக்கவில்லை என்பதை உணரத் தொடங்கியுள்ளனர். நெல், கோதுமை ஆகிய இரண்டொரு தேர்வுகளில் தங்கியிருப்பதற்கு இவர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

ஒப்பீட்டளவில் குறைந்த சக்திச் செலவுடன் வளர்க்கக் கூடிய பனை போன்ற புதிய பயிர்களை வளர்த்தல் இலங்கையில் மாத்திரமல்ல உலகளவிலும் எதிர்காலத்திற்கு ஓர் அவசியதேவையாகும்.

### பொய்யாமொழி



குறள்:

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

பொருள்:

தம்முடைய மக்களின் சிறுகைகளால் அளாவப் பெற்ற உணவு, பெற்றோருக்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமையுடையதாகும்.

## காங்கேசன் இராணுவ முகாமை அகற்றக் கோரி மகஜர்

### உதவி அரச அதிபரிடம் கையளிப்பு

காங்கேசன்துறை, ஜன. 31

"பாதுகாப்பு வலய எல்லைக்குள் கீரிமலை பிரதேசம் வருவதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர். புனித ஸ்தலமான கீரிமலையில் சமய சம்பந்தமான வழிபாடுகளையும், சமயக்கிரியைகளையும் செய்ய முடியாமல் சைவ மக்கள் திண்டாடுகிறார்கள். ஆகவே மேற்படி பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

அல்லது காங்கேசன் துறை ஹாபர் வியூ ஹோட்டலில் உள்ள இராணுவ முகாமை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும்"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்று கீரிமலையிலிருந்து புறப்பட்டுச் சென்ற பேரணி ஒன்றின் முடிவில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கீரிமலை பிரஜைகள் குழு, அன்னையர் முன்னணி மற்றும் பொது மக்கள், மாணவர்கள் உட்பட 500க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இப்பேரணி கீரிமலை பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

கீரிமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. க. [illegible] சாங்க அதிபரிடம் கைய [illegible] தெரிவிப்பதாவது:-

இப்பாதுகாப்பு வலயத்திற்குள் சீமெந்து ஆலைச் சுற்றாடலும் அடங்குவதால் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள். ஹாபர் வியூ ஹோட்டல் இராணுவ முகாம் ஒரு புறமும், காங்கேசன்துறை சீமெந்து ஆலை வெடி அறையில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் மறுபுறமும் தொழிலாளர்களுக்கு பெரும் அச்சத்தை உண்டு பண்ணி வருகின்றனர். வெடி அறையில் உள்ள இராணுவத்தினர் மேல் மாடியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதால் மாவிட்டபுரம் கீரிமலை வீதியால் செல்லும் தொழிலாளர்கள், பாதசாரிகள், வாகனத்தில் செல்பவர்கள் [illegible] வேண்டியுள்ளது. [illegible] அருகில்

## பாடசாலை அபிவிருத்தி

கொடிகாமம், ஜன 31

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அபிவிருத்திச்சங்க முயற்சியால் இவ் வித்தியாலயத்தில் அதிபர் காரியாலயம், வகுப்பறைகள் நிர்மாணிக்க கல்விப்பகுதியால் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ள வலித்தூண்டல் கிராம மக்கள் தமது கடற்றொழிலை மேற்கொள்ள முடியாமல் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர்.

இம் மகஜரை பெற்றுக்கொண்ட வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராஜரத்தினம் இதனை வடபகுதி இராணுவ இணைப்பதிகாரிக்கும் யாழ். அரச அதிபருக்கும் தாம் நேரில் சென்று கையளிப்பதாக உறுதியளித்தார்.

## சிறிமா செய்யாததையா நான் செய்கிறேன்?

### ஜனாதிபதி கேட்கிறார்

கொழும்பு, ஜன. 31

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 3 லட்சத்து 45ஆயிரம்பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க திருமதி பண்டாரநாயக்கா ஒப்புக் கொண்டார்.

நான் செய்துள்ள உடன்படிக்கைப்படி மேலதிகமாக 94 பேருக்குத்தான் குடியுரிமை வழங்கப்படப் போகின்றது. இது பிழையா?

ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்படிக்கேட்டார்.

காலியில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றைத் திறந்துவைத்துப்பேசுகையில் திரு. ஜெயவர்த்தன இக் கேள்வியை எழுப்பினார்.

கடந்த புதன்கிழமை மாலை இக்கூட்டம் நடந்தது.

இந்த நாட்டுக்காக உழைத்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களை எங்கேஅனுப்பி வைப்பது? அவர்களும் இங்குதான் வாழவேண்டும்.

தற்போது கொண்டு வரப்படும் சட்ட மூலம் ஒரு சிறு திருத்தமே.

இப்படிச் சொன்னார் திரு.ஜெயவர்த்தன.

## குடியுரிமை வழங்க மக்கள் அனுமதி தேவை

### சிறிமா சொல்கிறார்

கொழும்பு, ஜன 31

மக்களின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் தான் மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டமூலம் கொண்டு வரப்படவேண்டும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

கொழும்பு நகரமண்டபத்தில் கடந்த புதன் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் திருமதி பண்டாரநாயகா பேசினார்.

கூட்டத்துக்கு அஸ்கிரிய பீடாதிபதிபலிப்பானந்த சந்தானந்த தேரோ தலைமை வகித்தார்.

## இராஜகோபுர மகா கும்பாபிஷேகம்

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோயில் பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இன்று காலையில் நடைபெறுகிறது. அதையொட்டி இந்தப் பாடல்கள் இங்கு பிரசுரமாகின்றன.

கடல் சூழ்ந்த ஈழநாட்டில்
காரை கருங்காலியில் இருந்து
கருத்துடன் எமைக் காக்கும்
கடம்பனே போற்றி! போற்றி!!

* *

பஞ்சதள ராஜகோபுரம் அணிந்து
பவ்வியமாய் வீற்றிருந்து – எம்மை
பாதகர்களிடம் இருந்து காக்கும் சிவ
பாலகனே போற்றி! போற்றி!!

* *

அரக்கர் பிடியில் சிக்குண்ட உன்
அடியவர்கள் குறை தீர்த்ததுபோல் மீண்டும்
வேல் ஏந்தி வந்தெம் குறை தீர்ப்பாய்
வேலவா போற்றி! போற்றி!!

* *

வாழ்க வாழ்க ராஜகோபுரம் வாழ்க
வானுற ஓங்கி நின்று வாழ்க! வாழ்க!!
காரைமக்கள் புகழும் இது போலோங்கி
காலம் பூராவும் வாழ்க! வாழ்க!!

– சுந்தா

## சட்ட விரோத மின்சாரம்; இளைஞனைப் பலி எடுத்தது

விசுவமடு, ஜன. 30

சட்டவிரோத மின்சாரம் முரசுமோட்டைப் பகுதியில் 16வயது மாணவனைப் பலி எடுத்தது. இச் சம்பவம் கடந்த வாரம் நடந்தது. கந்தையா தயநீசன் என்ற மாணவனே இவ்வாறு பரிதாப மரணத்தை தழுவிக்கொண்டவராவர்.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட மின்சார வெளிச்சத்தில் இரவுப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்த வேளை திடீரென மின்சாரம் தடைப்பட்டதாம்.

இதைச் சரிபார்ப்பதற்குச் சென்ற இவர் தாது காப்பற்ற வயர் ஒன்றைத் தொட்டபோது மின்சாரம் தாக்கி மரணமானார் என்று அறியப்படுகிறது.

இப்பகுதியில் இதற்கு முன்னரும் சட்ட விரோத மின்பாவனையால் மூவர் மரணமானது குறிப்பிடத்தக்கது. இத்துடன் அநேக கால்நடைகளும் மரணமாகியுள்ளன.

புதிய ஆசிரிய நியமனம்

## உதவி அரச அதிபரின் அத்தாட்சி போதுமானது

யாழ்ப்பாணம், ஜன. 31

வட பகுதியில் புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள், பிரதேச உதவி அரசாங்க அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரங்களை சமர்ப்பித்தால் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பதிகாரி, பொலீஸ் அதிகாரி அல்லது அரசாங்க அதிபரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தே ஆசிரியர் நியமனக் கடிதங்களை கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் இருந்து பெற வேண்டிய நிலை முன்னர் இருந்தது.

புதிதாக ஆசிரிய நியமனம் பெற்றோர் இந்த நடைமுறையால் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

இது பற்றி கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து தான் பிரதேச உதவி அரசாங்க அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ள கல்விச் சேவை ஆணைக்குழு முன்வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BITSMANS Institutes**
MANIPAY
3ஆவது பிரிவு O/L 9ம், 8ம், 7ம், 6ம், 5ம், வகுப்புக்களுக்குரிய சகல பாடங்களும்
ஆரம்பம்:
1 - 2 - 86 சனி 9-00 A.M.
(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.)

# உதயன்

31-01-1986

**BITSMANS Institutes**
MANIPAY
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH
with GRAMMAR
By S. B. IYAR (Nallur)
ஆரம்பம்: 1 — 2 — 86
சனி 4-00 p.m.
(குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

## வித்தாரம்

என்ன, முரளித் தம்பி! நல்ல குஷியாய் இருக்கிறாய்! ஏதாவது நல்ல சேதி கிடைச்சிருக்கோ. அட உனக்கு எல்லாமே நல்லாய்த்தான் தெரியும். நாங்கள் தான் பேப்பர்காரர் ஏதாவது கெட்டதா நடந்தால் பேப்பரிலை "லீட்" அடிக்கலாம் எண்டு சந்தோஷப்படுவோம். நீயும் அந்தமாதிரித் தானே இருக்கிறாய். நிச்சயமாய் முந்தின பிறப்பிலை நீயும் ஒரு பேப்பர்காரன் தான்.

ஓமப்பா, புதன்கிழமை எங்கடை தமிழ்ப் பிரதேசங்கள் செய்திக்களங்களாக இருந்தன. வடக்கிலை பேரணி, கிழக்கிலை ஹர்த்தால். அது இரண்டும் அஹிம்சைப்போராட்டங்கள். பிறகு மலையகத்தில் பெரிய நெருக்கடி; ஊரடங்கு. மன்னாரிலை போராளிகள்—படைகள் மோதல். முல்லைத்தீவிலை மூண்டு நாளாய்ச் சமர். அப்படி இப்படி எண்டு ஒரே பரபரப்பான செய்தியள்.

வடக்கிலை கிழக்கிலை நடக்கிற அமைதியான போராட்டங்களுக்கும், ஆயுதப் போராட்டங்களுக்கும் ஆர் கால்? அவையள் அரசாங்கக்கள் தான் — வேறை யார்? அதை மலைநாட்டிலை அந்தப்பகுதி அரசாங்க விரோத சக்திகள் செய்து குழப்பத்தைத் தூண்டி விடப்பாக்கினம்.

தமிழன்—அவன் வடக்குத் தமிழனாய் இருந்தாலும் சரி கிழக்குத் தமிழனாய் இருந்தாலும் சரி, மலைநாட்டுத் தமிழனாய் இருந்தாலும் சரி, தமிழனுக்கு உரிமை ஏதாவது குடுத்தால் அவைக்கு ஏறிவிடும். ஒருக்கா யூ. என். பி.க்கு ஏறின, அடுத்த முறை எஸ். எல். எப். பி.க்கு ஏறும். தமிழன் எண்டா இடங்கண்டவை எண்டநினைப்பு அவைக்கு? தங்கடை அரசியல் போட்டிக்குத் தமிழனைப் பாவிக்க வேணும் எண்ட நினைப்பு.

அதாலை தானே உந்த விழுவான்கள் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிக்கிறாங்கள். அதை வைச்சிருந்தா ஏதாவது சொல்லி ஒரு தரை மாறி மற்றவை சிம்மாசனம் ஏறலாம் எண்ட நினைப்பு.

பலரைச் சில காலம் ஏமாத்தலாம். சிலரைப் பல காலம் ஏமாத்தலாம். எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாத்தேலாது எண்டது அவைக்கு இப்ப விளங்கியிருக்கும்.

குடியுரிமை குடுக்கிறத்தைக்குழப்புறத்துக்காக மலையகத்திலை கலவரத்தை உண்டாக்கவேணுமெண்டு எண்டுஅங்காலை ஒரு பகுதி நினைச்சுச் சில சம்பவங்களை நடத்தியிருக்கினம்.

ஆனா மலையகத் தமிழரும் விடயில்லை. தங்களாலை முடிஞ்சவரை தங்களைப் பாதுகாக்க வேலையள் செய்திருக்கினம். பெரும்பான்மை ஆக்களோடை இருக்கயிக்கை அப்பிடி ஒரு துணிவு இல்லாட்டால் அவை நெடுக நெடுக வண்டில் விடப் பாப்பினமல்லே!

**கொண்டோடி**

குடிஉரிமை வழங்காத வரை

# உள்விவகாரத்தில் இந்தியா தலையிட காரணம் இருக்கும்

## பிரதமர் பேச்சு

கொழும்பு, ஜன. 31

இந்திய வம்சாவழியினரின் பிரச்சினை தீர்க்கப்பட்டுக் குடியுரிமை வழங்கப்படாதவரை எமது நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கு ஒருகாரணம் இருந்து கொண்டே இருக்கும்.

பிரதமர் ஆர். பிரேமதாசா நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் இப்படிச் சொன்னார்.

நாடாளுமன்றம் நேற்றுக்கூடியது.

குறுக்கிட்டுப் பேச முற்பட்டார்.

அவரைப் பேசக்கூடாது என்று சபாநாயகர் உத்தரவிட்டார்.

அதன்பின்னர் பிரதமர் திரு. பிரேமதாஸ மலையகத்தமிழர் குடியுரிமைச் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்குச் சமர்ப்பித்துப் பேசினார்.

மகரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன இடையில் குறுக்கிட்டு

மலையகத் தமிழரை நாம் என்ன செய்வது? கடலினுள் தள்ளுவதா?- இப்படி திருமதி பண்டாரநாயக்கா அன்று கேட்டார்.

3 லட்சத்து 75 ஆயிரம் பேருக்குக்குடியுரிமை கிடைக்க வழிசெய்த சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி அன்று எதிர்க்கவில்லை.

தேச ஒற்றுமை கருதி நாம் பூரண ஆதரவு கொடுத்தோம்.

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் 1956இல் நாடாளுமன்றத்தில்பேசுகையில், "மலையகத் தமிழரை நஞ்சூட்டிக்கொல்வதா? கடலில் தள்ளுவதா? மனிதாபிமான அடிப்படையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மலையகத்தமிழர்பலதலைமுறைகளாக இந்தநாட்டில் வாழ்ந்து வருகின்றவர். அவர்கள் செல்ல வேறுநாடு கிடையாது. — இவ்வாறு பிரதமர் சொன்னார்.

இன்று காலை வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜன. 31

மலையக தமிழர் குடியுரிமைச் சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது அல்ல.

இபபடி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரதமநீதியரசர் எஸ். சர்வானந்தா தலைமையிலான 3 பேர் கொண்ட நீதியரசர் குழுவே இத்தீர்ப்பை வழங்கியது.

அரசமைப்புச் சட்டத்தின் 7வதுபிரிவிற்கிணங்க சட்ட மூலத்தில் சில திருத்தங்களை செய்த பின்னரே அதனை நிறைவேற்ற வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

## நாடாளுமன்றத்தில் நேற்று

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டமூலம் பற்றி உயர்நீதிமன்றம் அனுப்பிய தீர்ப்பை சபாநாயகர் முதலில் வாசித்தார்.

பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதற்காக சபையின் நிரந்தர விதிகள் இடைநிறுத்தி வைக்கப்படவேண்டும் என்று முன்மொழிந்தார்.

அச்சமயம் அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி சில நிமிஷநேரம் பேசினார்.

சபாநாயகர் உறுப்பினரை மேலும் பேச விடாது தடுத்தார்.

அதன்பின்னர் பிரதமர் பேசினார். அவர் சொன்னதாவது;

1964ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் அன்றைய பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா சொன்னதை இன்று நினைவுபடுத்த விரும்புகின்றேன்

### கோட்டை முகா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையத் தேவை இல்லை; பதற்றப்படத் தேவை இல்லை.

—இப்படிப் பிரிகேடியர் அத்தியட்சகருக்குக் கூறியதுடன்,

மோட்டோ இயக்கப்படும் விதம், அது ஆஸ்பத்திரியைப் பாதிக்காது என்பன போன்றவற்றைச் செய்முறையாக அத்தியட்சகருக்கு விளக்கியும் காட்டினாராம்.

### பத்து லட்சம்..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியில் யாழ் ஆயர் அதிவணக்கத்திற்குரிய தியோகுப்பிள்ளை, வணக்கத்திற்குரியஆயர்டி.ஜே. அம்பலவாணர், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், ஈழநாடு ஆசிரியர் திரு. என். சபாரத்தினம் மற்றும் முஸ்லிம்பெரியார்களும் கலந்து கொள்வர்.

பிரஜைகள் குழுக்கள், வெகுஜன இயக்கங்கள், மத ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுவர்.

10லட்சம்கையொப்பங்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் இந்தமகஜர்இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

# கும்பிடக் கும்பிட என்னைச் சுட்டார்கள்

## மன்னாரில் காயமடைந்த மீனவர்

நல்லூர், ஜன. 31

ஐயா: சுடாதீர்கள் என்று கையெடுத்துக்கும்பிட்டும்கூட அவர்கள் என்னைச் சுட்டுவிட்டனர். இதனால் எனது வயிற்றில் காயம் ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை தலை மன்னார் பழைய பாலத்தடியில் சீருடையினர் சுட்டதில் கபிரியல் அந்தோனி பவுளி (38 வயது) என்பவர் வயிற்றில் காயமடைந்தநிலையில் நேற்று யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தை.

அங்கு நடந்த சம்பவம் பற்றி அவர் எமது செய்தியாளரிடம் இப்படித் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

செவ்வாய்க் கிழமை இரவு 8 மணியளவில் நானும் 40க்கு மேற்பட்ட வேறு மீனவர்களும் கரைவலை இழுத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது கடலில் இருந்து 'டோர்ச்லைற்' வெளிச்சம் மின்னிமின்னி எரிந்தது.

சில நிமிடங்களில் எம்மை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

கரைவலை இழுப்பதை விட்டுவிட்டு எல்லோரும் பயந்து ஓடினோம்.

என்னால் ஓடமுடியவில்லை. கடற்கரையில் விழுந்துவிட்டேன்.

அப்பொழுது படகு ஒன்று கரைக்கு வந்து சேர்ந்தது. அதிலிருந்து சீருடையினர் ஆயுதங்களுடன் இறங்கி நாலாபக்கமும் சுடத் தொடங்கினர்.

என்னைநோக்கி ஒருவர் வந்தார்.

ஐயா, சுடாதீர்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டேன். அப்படியிருந்தும் அவர் என்னைச் சுட்டுவிட்டார். நான் இரத்தம் வடிந்த நிலையில் மணலில் விழுந்துவிட்டேன்.

பின்னர் வேறு சிலர் வந்து சிங்களத்தில் நான் இறந்துவிட்டேனோ என்று பார்க்கும்படி கூறியது எனக்குக் கேட்டது

நான் உடன் எழுந்து ஐயா என்னைச் சுட்டுவிட்டார்கள் கொண்டுபோங்கள் என்றேன்.

அப்போது அவர்களில் ஒருவர் நிற்காமல் ஓடும்படி சிங்களத்தில் கூறினார்.

நான் வயிற்றைப் பொத்திக்கொண்டு ஓடிவிட்டேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

இவருக்கு 5 பிள்ளைகள் உண்டு.

### கம்பன்::

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

தரங்கு மண்டபம் ஒன்றும் நூல் நிலையம் ஒன்றும் அமைந்திருக்கும். கீழ்மாடி ஐந்து தங்கும் அறைகளைக் கொண்டிருக்கும்.

இக்கட்டடத்திற்கான காணியை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நல்லூர் தேவஸ்தானத் [illegible] கத்திற்குப் பெற்றுக் [illegible]

## புனர்வாழ்வு கழகம் வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 31

இனவன் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கிராமங்களில் அமைக்கப்பட்ட பிரஜைகள்குழுச் செயலாளருடன்உடன்தொடர்பு கொள்ளும்படி அகில [illegible] புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்திரா கொலை வழக்கு

# 2 பேருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜன. 31

இந்திராகாந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரில் 2 பேருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஒத்திவைக்கப்பட்டது. புதுடில்லி மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

தூக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி மகேஷ் சந்திரா, சாகும் வரை தூக்கிலடப்பட வேண்டும் என்று தனது தீர்ப்பில் குறிப்பிடாததே இதற்குக் காரணமாகும்.

மரண தண்டனை விதிக்கிறேன் என்று மட்டுமே நீதிபதி தீர்ப்பில் கூறியிருந்தார்.

இதனைச் சுட்டிக்காட்டியே மேல் நீதிமன்றம் பல்பீர்சிங், தத்வத்சிங் ஆகியவர்கள் மீதான மரண தண்டனையை ஒத்திவைத்தது.

இது சம்பந்தமாக சட்டம் சரியாக அனுசரிக்கப்படும் வரை மரண தண்டனை நிறைவேற்றப் படமாட்டாது என்று மேல் நீதிமன்றம் கூறியது.

## மட்டக்களப்பில் மேலும் 2 இராணுவ முகாம்கள்

மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 2 ஆயுதப்படை முகாம்கள் நிறுவப்பட்டு உள்ளன.

ஒன்று, கதிரவெளி தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இரண்டாவது, மாங்கேணியில் உள்ள அரச தோட்டம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது.

மூதூர்- மட்டக்களப்பு வீதியில் இரண்டு முகாம்களும் உள்ளன.

வாகரை பிரதேச உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் இவை வருகின்றன.

### தலைமை..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு விவசாய நிறுவனம், பனம் பொருள் அபிவிருத்திச் சபை ஆகியவை யாழ்ப்பாணத்தில் கூட்டாக நடத்திய சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மாநாட்டில் 'நிப்ருட்' எனப்படும் தேசிய பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவது என்று முடிவு செய்யப்பட்டு இருந்தது.

பனம் பயிர் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, பதனிடுதல், சந்தைப்படுத்தல் ஆகிய 4 அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆராய்ச்சி நிலையம் ஆய்வுகளை மேற்கொள்ளும்.

இதற்கான சகல உதவிகளும்ஐ-நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### நூரளையில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி, உப தலைவர் திரு. பெரிசுந்தரம் உட்பட தோட்ட நிர்வாகத்தினர், அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

✱ இன்று 31ஆம் திகதி தொடக்கம் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்புவது

✱ தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான உணவு வசதிகளைத் தருவிப்பதற்கும் வழங்குவதற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் 'சபை அரச பெருந்தோட்ட கூட்டுத் தலைமை ஆகியவற்றின் தலைவர்கள் வேண்டிய ஒழுங்குகளைச் செய்வது. இவர்களுக்கு அரசாங்க அதிபரும் உதவி புரிவார்.

✱ தலவாக்கலை மற்றும் பிரதேசங்களில் அசம்பாவிதம் நடக்காமல் தடுப்பதற்காக பொலீஸாரும் இராணுவமும் கூட்டாக ரோநது நடவடிக்கையில் ஈடுபடுதல். தேவை ஏற்படும் பட்சத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் அழைத்துச் செல்லுதல்.

✱ சம்பந்தப்பட்ட பகுதிகளில் அமைதியை ஏற்படுத்த [illegible], மத [illegible] கொண்ட சமரசக் குழுக்களை நிறுவுவது.

ஹெலிக்கொப்டர் துரத்திச் சுட்டபோதும்

## இளைஞர்களின் பஸ் மின்னலென மறைந்தது

நல்லூர், ஜன. 31

இளைஞர்கள் வந்த பஸ்ஸை ஹெலிக்கொப்டர் துரத்திச் சுட்டது. ஆனாலும் பஸ் மின்னலென ஓடி மறைந்தது.

முல்லைத்தீவைச் சேர்ந்த சண்முகம் ரமேஷ்குமார் (19 வயது) என்ற இளைஞர் காலிலும் வயிற்றிலும் காயமேற்பட்ட நிலையில் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் அங்கு நடந்த சம்பவம் பற்றி மேலும் சொன்னதாவது:

புதன்கிழமை காலை 10 மணியளவில் முல்லைத்தீவு பட்டுவாசர் பாலத்தடியில் நடந்து போய்க் கொண்டிருந்தேன்.

அப்பொழுது எனக்கு முன்னால் இ. போ. ச. பஸ் ஒன்று போய்க் கொண்டிருந்தது.

பஸ்ஸினுள் நிறைய ஆயுதங்களுடன் இளைஞர்கள் சென்று கொண்டிருந்தனர்.

அவ்வேளை சுமார் ஒரு மைல் உயரத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்று பறந்து வந்தது.

அந்த ஹெலிக்கொப்டர் மிகத் தாழப்பறந்து வந்து பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

பஸ்ஸின்மீது ஐந்து அல்லது ஆறு சன்னங்கள் பட்டுச் சிதறின.

எனது வயிற்றையும் ஒரு சன்னம் தாக்கியது. பின்னர் காலையும் ஒரு சன்னம் தாக்கியது. நான் வீதியில் விழுந்துவிட்டேன்.

பஸ் வேகமாகச் சென்று விட்டது.

துப்பாக்கி வேட்டுகளும் குண்டுச் சத்தங்களும் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன.

இராணுவத்தினர் முல்லைத்தீவை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருப்பதாகவும் இராணுவத்தினர் தண்ணீர் எடுத்துச் செல்லும் கிணறும் இளைஞர்களின் பாதுகாப்பில் இருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன்.

சூடுபட்ட என்னை எனது உறவினர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தனர். இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

கும்புறுப்பிட்டியில்

## அறுவடை செய்த நால்வர் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜன. 31

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கும்புறுப் பிட்டியில் தேடுதல் நடத்திய பாதுகாப்புப் படையினர் வயலில் அறுவடை செய்து கொண்டிருந்த நான்கு விவசாயிகளைச் சுட்டுக் கொன்றனர். நால்வரின் சடலங்களும் உடனடியாக எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கும்புறுப்பிட்டி தும்பநாற்று வெளி என்னும் இடத்தில் நடந்தது.

செல்வநாதன் கைலாயபிள்ளை (30 வயது) மூன்று பிள்ளைகளின் தந்தை, காத்தமுத்து செல்வராஜா (55 வயது) கந்தையா சுரேந்திரன், கிருஷ்ணபிள்ளை தங்கராஜா (24 வயது) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

## சுன்னாகத்தில் பதற்றம்

சுன்னாகம், ஜன. 31

காங்கேசன் துறையிலிருந்து நடைபவனியாக இராணுவம் வருகின்றது என்ற வதந்தியைத் தொடர்ந்து சுன்னாகப் பிரதேசத்தில் நேற்று பெரும் பதற்றம் ஏற்பட்டது. சந்தை வியாபாரிகள் சிதறி ஓடினர்.

மீன்கடையில் சில பெண்களும் மீன் விற்பனைசெய்த பெண்களும் இராணுவம் வருகிறது என்ற பீதியுடன் ஓடிய போது மிதிபட்டுக் காயமடைந்ததுடன் மீன் வெட்டும் கத்திக்கு மேல் விழுந்ததால் ஒருவர் வெட்டுக் காயத்துக்கும் உள்ளானார்.

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நேற்று இராணுவம் புகுந்ததையடுத்து இந்த களேபரம் இடம்பெற்றது.

## மன்னாரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கு ஈடு கொடுக்க முடியாமல் படை வீரர் பின்வாங்கினர்.

மன்னார் கட்டுக்கரைப் பக்கம் நான்கு ஹெலிக்கொப்டர்களில் வந்திறங்கிய சிப்பாய்களுடன் மோதினோம்.

அங்கு காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு பாதுகாப்புப்படை விலகிச் சென்றது.

இந்தப் போரில் எமது தரப்பில் லெப்டினன் உமாகாந்தன் குண்டு அதிர்ச்சியினால் மரணமானார்.

ஆயுதப் படையில் 26 பேர் சம்பவம் நடந்த இடத்தில் இறந்தனர். 8 பேர் பலத்த காயம் அடைந்தனர். காயமடைந்தவர்களில் மூன்று பேர் கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையின்பின் மரணமானதாகத்தெரிய வருகிறது.

இராணுவத் தரப்பில் இரண்டு லெப்டினன் உட்பட மூன்று சார்ஜன்ட் மேஜர்கள் கொல்லப்பட்டனர்.

மன்னார் தள்ளாடி முகாமிலிருந்து புதனன்று காலை 5,30 மணிக்கு 400 ஆயுதப்படையினர் 25 நவீன கனரக பீரங்கி வண்டிகள், டிரக்குகள் சகிதம் அடம்பன், கண்டல்', ஆண்டான்குளம் பகுதிகளை முற்றுகையிட்டனர். 25 பொது மக்களைக் கைது செய்தனர். இதில் 8 பெண்களும் அடங்குவர்.

இதன் பின்னர் இத்தாலியிலிருந்து அண்மையில் வாங்கிய குண்டு வீச்சு விமானத்திலிருந்து பரப்புக்கடந்தான் பக்கமாக குண்டுகள் வீசப்பட்டன. சுமார் நூறு ஆயுதப்படை வீரர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் இறக்கப்பட்டனர்.

இரண்டு ஹெலிக்கொப்டர்கள் அவர்களுக்கு அப்போது பாதுகாப்பு வழங்கின. எமது போராளிகள் அந்த இரண்டு ஹெலிக்கொப்டர்களையும் ரொக்கட் லோஞ்சர் மூலம் தொடர்ந்து தாக்கினர். இதனால் அவை பின்வாங்கின. ஒரு ஹெலிக்கொப்டரிலிருந்து புகை மண்டலம் கிளம்பியது. அது தள்ளாடி முகாமுக்குத் திரும்பியது.

## செய்திச் சரம்

### சிறிமாவோ மீண்டும் தலைவி

கொழும்பு, ஜன. 31

சுதந்திரக் கட்சியின் தலைவியாக மீண்டும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவர்களில் ஒருவராக திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச் செயலாளராக திரு. சோமசிறி தஸநாயக மீண்டும் தெரிவானார்.

### அஸ்கிரிய பீடாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 31

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குவது இந்தநாட்டில் சிங்கள இனத்துக்குப் புதைகுழி தோண்டும் செயலாகும்.

இப்படி அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்ததேரோ கூறியிருக்கின்றார்.

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றினால் சிங்களவரிடமிருந்து எழும்பும் பாரதூரமான விளைவுகளை அரசாங்கம் எதிர்நோக்கவேண்டியேற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு,ஜன 31

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரிக்குள் புகுந்த இனந்தெரியாதநபர்கள், அங்கு இருந்த டெலிவிஷன் பெட்டியை எடுத்துச் சென்றனர்.

✱ ✱

ஹர்த்தாலை ஒட்டி பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு அரச அலுவலகங்களின் திறப்புக்கள் மீண்டும் உரிய அதிகாரிகளிடம் இனந்தெரியாதோரினால் ஒப்படைக்கப்பட்டன.

✱ ✱

புதூரில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட கிராமசேவகர் எஸ். கே. மகாலிங்கம் நேற்று விடுவிக்கப்பட்டார்.

### சீனஜனாதிபதி விஜயம்

கொழும்பு, ஜன. 31

சீன ஜனாதிபதி திரு. லீசியானியன் மார்ச் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வார்.

### கொழும்பில் நாளை மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன 31

பாதுகாப்பு வலயத்திற்குள் வரும் யாழ்ப்பாணத்திலுள்ள அரசஅலுவலகங்கள்,ஆஸ்பத்திரிஆகியவற்றின்தலைவர்கள்,அதிகாரிகளை தேசிய பாதுகாப்பு அமைச்சர் மாநாடுஒன்றுக்கு அழைத்துள்ளார்.

இந்த மாநாடு நாளை சனிக்கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும்.

பாதுகாப்பு வலயத்தினால்எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றி யாழ் அரசஅதிகாரிகள் அமைச்சரிடம் விரிவாக எடுத்துரைப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரதான வாயில் மூடப்பட்டது

கண்டுக்குளி, ஜன. 31

யாழ்ப்பாணம் நிம்மர் மண்டப பிரதான வழி மூடப்பட்டுவிட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: உதயன், உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 807,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 18, 8 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீடு தேதி 31-01-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org